செ.வெ.எண்.24/2017 நாள்:13.03.2017

**<u>சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் வட்டம் கானூர் கிராமத்தில் திருமானேந்தல் கண்மாயை குடிமராமத்து திட்டத்தின் கீழ் புணரமைக்கும் பணியினை</u>**

**<u>மாண்புமிகு கதர் மற்றும் கிராம தொழில்துறை அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன் அவர்கள் துவக்கி வைத்தார்.</u>**




சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் வட்டம் கானூர் கிராமத்தில் திருமானேந்தல் கண்மாயை குடிமராமத்து திட்டத்தின் கீழ் புணரமைக்கும் பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில், சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பிஆர்.செந்தில்நாதன் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு கதர் மற்றும் கிராம தொழில்துறை அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன் அவர்கள் துவக்கி வைத்தார். உடன் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.மாரியப்பன்கென்னடி ஆகியோர் உள்ளார்.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் வட்டம் கானூர் கிராமத்தில் திருமானேந்தல் கண்மாயை குடிமராமத்து திட்டத்தின் கீழ் புணரமைக்கும் பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில், சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பிஆர்.செந்தில்நாதன் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு கதர் மற்றும் கிராம தொழில்துறை அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன் அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு கதர் மற்றும் கிராம தொழில்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது, கானூர் கிராமம் திருமானேந்தல் கண்மாய் 45.88 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றது. இக்கண்மாய் முழுநீர் மட்ட அளவில் 4 மில்லியன் கனஅடி நீரைத் தேக்கி வைக்க முடியும். ஆனால் தற்பொழுது இக்கண்மாய் படுகை வண்டல் மண், சீமைக்கருவேல் மரங்களால் முடபட்டுள்ளதால் தண்ணீர் தேக்கும் கொள்ளவு குறைந்துள்ளது.

எனவே தமிழக அரசு மக்களின் நலனை கருத்தில் கொண்டு குடிமராமத்து திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பங்களிப்போடு இத்திட்டத்தை செயல்படுத்தி உள்ளது. விவசாயப் பெருமக்கள் இத்திட்டத்தினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் என மாண்புமிகு கதர் மற்றும் கிராம தொழில்துறை அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன் அவர்கள் தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, தெரிவித்தாவது, இந்த ஆண்டு நமது மாவட்டத்தில் 64% பருவமழை குறைவாக பெய்துள்ளது. நடைபெற்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் குடிமராமத்து திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது.

விவசாயிகளின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டம் குடிமராமத்து திட்டமாகும். பொதுமக்கள் எந்தந்த கண்மாய் பாசன வசதி உள்ளனை என தெரிவிக்கும் பட்சத்தில் முன்னுரிமை அடிப்படையில் உடனடியாக செய்து தரப்படும். விவசாயிகள் 10 சதவிதம் பங்களிப்பை தந்தால் அரசு 90 சதவிதம் அளிக்கும் எனவும் விவசாயிகள்தான் இந்த வேலையை செய்யப்போகிறவர்கள் எனவும் இன்று நமது மாவட்டத்தில் 44 இடங்களில் 4 கோடி 40 இலடசத்தில் இத்திட்டம் செயல்ப்படுத்தப்படுகிறது. 40 ஹெக்டேர் கருவேல் மரங்கள் அப்புறப் படுத்தும் பணிகள் விரைந்து நடைபெற்று வருகிறது. ஆகவே விவசாயப் பெருமக்களாகிய நீங்கள் இத்திட்டத்தினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ,ப.,அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.மாரியப்பன் கென்னடி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.அழகேசன், கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,

சிவகங்கை.